**சரியான விடை**
1.(ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது.
2.(ஆ) இந்து கூட்டு குடும்பம்
3.(இ) வில்லியம் R பேசட்
4.(இ) 1932சட்டம்
5.(ஆ) முதல்வர் மற்றும் முகவர்
6.(அ) 6%
7.(ஆ) நிறுமச் செயல்முறை விதிகள் மாதிரி
8.(இ) 7
9.(அ) 90 நாட்கள்
10.(இ) அழைப்புபணத்தை செலுத்ததவறுவது
11.(ஆ) 15
12.(இ) இயக்குநர் அவையால்
13.(அ) நிகழ்ச்சி நிரல்
14.(அ) முதன்மை சந்தை
15.(அ) காளை
16.(ஆ) 1956
17.(ஈ) 25
18.(ஆ) மாவட்ட தலைநகரங்களில்
19.(அ) 51 சதவீதம்
20.(அ) இயக்குநரவை

**கோடிட்ட இடத்தை நிரப்புக**
21.பொது கூட்டுரு
22.வரையறா பொறுப்பு
23. சிறிய
24.நிறுவனம்
25.20
26.கூட்டு மற்றும் தனி
27.கூட்டாண்மை கலைப்பு
28.2
29.தகவல் அறிக்கை
30.செயல்முறை விதிகள்
31.முகவர்கள்
32.சிறப்பு
33.ஆண்டு பொது
34.கடனீட்டு
35.பத்திரங்களின் மறுவிற்பனை
36.மும்பை
37.கூட்டுறவு சங்கங்கள்
38.மக்களாட்சி
39.தனியார்
40.பொது சேவை அல்லது பொதுநலன்

**ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி**

**41.அமைப்பு10X4=40**
ஆலன்லூயி அவர்களின் கூற்றுபடி செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாக பிரித்தலும் குறிக்கோள்களை அடைய பணியாளர்களால் பயன்தரு முறையே உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஆணையுரிமையையும் வரையுறுத்தி வழங்களையும் அமைப்பு என்ற சொல் குறிக்கும்

**42.ஒருமை உத்தரவு**ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை உயர் அதிகாரியிடம் இருந்து பெற வேண்டும்.ஒருபணியாளர் இரண்டு உயர் அதிகாரியின் கீழ் பணியாற்றுவது கடினம். அப்படி இருந்தால் குழப்பமும் ஒழுக்கமின்மையும் ஏற்படும்

**43.வரையறா பொறுப்பு:**தொழிலின் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில் தனது சொந்த சொத்துக்களை இழக்க நேரிடும். அதாவது கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**44.கூட்டாண்மை ஒப்பவணம்** :
இரண்டு (அ) இரண்டிற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே எழும் உடன்பாட்டின் காரணமாக உருவாக்கப்படுவது கூட்டாமை ஆகும்.இந்த உடன்பாடு பேச்சு வடிவிலோ அல்லது எழுத்து வடிவிலோ இருக்கலாம் பிற்காலத்தில் ஏற்படும் தகராறுகளை தவிர்க்க எழுத்துவடிவில் இருக்கும் உடன்பாடு சிறந்தது என கருதப்படுகிறது.

**45.வரையறுத்த கூட்டாண்மை**: ஒரு கூட்டாண்மையில் கூட்டாளிகள் பொறுப்பு வரையறுக்க பட்டிருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும்.இந்தியாவில் இத்தகைய கூட்டாண்மை உருவாக்க சட்டம் அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இவ்வகை கூட்டாண்மை அனுமதிக்கப்படுகிறது.

**46.கூட்டுபங்கு நிறுமம்** : நிறுமம் என்பது பல நபர்களின் சங்கமம் ஆகும். ஒரு நிறுமம் என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்.அது தன் பெயரிலேயே ஒப்பந்தங்களில் ஈடுபடலாம். பங்குநர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.நிறுமத்தின் பங்குகளை எளிதில் மாற்றலாம்.

**47.எந்தகாரணங்களுக்காக பங்குகள் ஒறுப்பிழைப்பு செய்யப்படுகின்றன ?**
அழைப்பு பணத்தை செலுத்தாத காரணத்தால் ஒரு உறுப்பினரின் பங்குகளை நிறுமம் பறிமுதல் செய்தல் பங்கு ஒறுப்பிழப்பு எனப்படும். பங்குகளை பறிமுதல் செய்தவுடன் அவற்றை வைத்துள்ளவர் நிறுமத்தின் உறுப்பினர் எனும் தகுதியை இழந்து விடுகிறார்.

**48.மீள்தகு முன்னுரிமை பங்குகள்:**
எவ்வகை பங்குநர்களுக்கும் நிறுமம் கலைக்கும் போதுதான் முதல் திரும்ப செலுத்தபடும்.நிறுமச் செயல்முறை விதிகள் அதிகார வழங்குமாயின் ஒரு குறிப்பிட்ட கால கெடுவுக்கு பின் வெளியீட்டு நிபந்தனைகளுக்கேற்ப முதல் திரும்ப செலுத்தி விடலாம்

**49.சட்டமுறை அறிக்கை** :சட்டமுறை கூட்டம் நடை பெற 21 நாட்களுக்கு முன்னர் கூட்ட அறிக்கையுடன் ஒரு அறிக்கையை இணைத்து அனுப்படும்.இதுவே சட்ட முறைஅறிக்கை ஆகும்.

**50.மாற்று இயக்குநர்:** இயக்குநரவை சாதரணமா கூடும் மாநிலத்தில் இருந்து ஒரு இயக்குநர் குறைந்தது 3 மாதங்களுக்கு குறையாமல் வெளியூர் சென்றிருந்தாலோஇயக்குநரவை கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் இருந்தாலோநிறுமச்செயல்முறை விதிகள் வழங்கியுள்ள அதிகாரத்தின் படி இயக்குநரவை ஒரு இயக்குநரை நியமிக்கலாம்.இதுவே மாற்று இயக்குநர் ஆவார்.

**51.ஆயத்த கொடுப்பு ஒப்பந்தம் :**
ஆயத்த கொடுப்பு ஒப்பந்தம் அவ்விடத்த ஒப்பந்தம்இவ்வகை ஒப்பந்தங்களில் பத்திரங்களை வாங்கியவர் பணத்தையும் விற்பவர்கள் பத்திரங்களையும் உண்மையாக பரிமாரிக் கொள்வார்.இந்த ஒப்பந்தங்கள் செய்யப்படும் அதே

நாளிலோ அல்லது 3 நாட்களில் இருந்து 7 நாட்களுக்குள் தீர்மானிக்கப்படும்.

**52.ஒருநபர் ஒரு வாக்கு:** கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி தன்மை கொண்டது.இதுமக்களாட்சி முறையின் பயிற்ச்சி களம் என கருதப்படுகிறது.ஒருவர் எவ்வளவு பங்குகள் கூட்டறவு சங்கத்தில் வைத்திருந்தாலும் அவருக்கு ஒரே ஒரு வாக்கு மட்டுமேஉண்டு.கூட்டுறவில் ஒருநபர் ஒருவாக்கு ஒரு ஆள் ஒருவாக்கு எனும் முறை பின்பற்றபடுகிறது.

**53.ஆதரவுபங்கதாயம்:** கூட்டுறவு சங்கத்திற்கு கிடைக்கும் லாபம் கீழ்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது.பங்காதாயம் 9% பொது காப்பு 25%சமுகநலப்பணி 10%மீதி லாபம் அவர்கள் அந்த சங்கத்தை பயன்படுத்தி கொண்டார்களே அல்லது கூட்டுறவு சங்கத்திற்கு ஆதரவு நல்கினார்களே அதன் அடிப்படையில் மேலுதியம் வழங்கப்படகிறது.

**54.நாட்டுடமையாக்கம்:** ஏற்கனேவே தனியார் துறையில் இயங்கிவரும் அதாவது தனியாருக்கு சொந்தமான தொழில்கள் மற்றும் வணிக அமைப்புகளை அரசு எடுத்துக் கொள்வது நாட்டுடமையக்கல் அல்லது தேசியமயமாக்கல் அலல்து அரசுடமையக்கல் அல்லது பொதுவுடமையாக்கல் எனலாம்.

**55.அரசு நிறுமத்திற்கு 4 (எ.கா)** :இந்துஸ்தான் ஸ்டீல் லிமிட்டட், மாருதி உத்யோக், பெல், அரசு போக்குவரத்துக் கழகம்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56.எந்த காரணங்களுக்காக அமைப்பை பற்றி படிப்பது முக்கியதுவம் வாய்ந்தது**

இலக்கினை நிர்ணயித்தல் அவற்றை நிறைவேற்ற நடவடிக்கைகளை தொகுதிகளாக பிரித்தல் அவற்றை செயல்படுத்த ஒதுக்கீட்டு செய்தல் பின்அனைத்த பணிகளையும் ஒருங்கிணைத்தல் ஆகியவை அமைப்பின் சிறப்புகள் ஆகும்.எனவே அமைப்பை பற்றி கீழ்காணும் காரணங்களுக்கு அறிந்து கொள்ள வேண்டியது முக்கியதுவம் வாய்ந்தது ஆகும்.

1.அமைப்பு மனிதவாழ்வில் அனைத்து தருணங்களிலும் பதவிமுக்கித்துவம் பெற்றுள்ளது.பிறப்பு கல்வி தொழில் முறையே மருத்துவமனை பள்ளி கல்லூரி போன்றவை தொழிற்கூடம் வியாபாரம் போன்ற அமைப்பகள் மூலம் நடைபெறுகிறது. 2.ஒரு மேலாளருக்கு அமைப்பு பற்றிய அறிவானது அவர் பணிகளை திறம்பட செயல்படுத்த உதவுகிறது.

3.அமைப்பு திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.அது சரியாக அமையவில்லை என்றால் ஏமாற்றத்தை அளிக்கக் கூடும். எனவே அமைப்பு பற்றி அறிவது முக்கியதுவம் வாய்ந்தது.

**57.கூட்டாளிகளின் வகைகள் :**

**1.உழைக்கும் கூட்டாளி**: முதலீடு செய்து தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளிக்கு உழைக்கும்கூட்டாளி அல்லது பணிபுரியும்கூட்டாளி அல்லது மேலாண்மைகூட்டாளி, அல்லது பொதுக்கூட்டாளி ஏன்றுபெயர். இவருடையபொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.

**2.உறங்கும்கூட்டாளிகள்(அ)உழையா கூட்டாளிகள்**

இவ்வகைக்கூட்டாளிகள்தொழிலில்முதலிடுவர்.ஆனால் தொழில்நிர்வாகத்தில்பங்குபெறுவதில்லை.இவ்வகைகூட் டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையா கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் ஏன அழைக்கப்படுவர்.

**3.பெயரளவு கூட்டாளி அல்லது பாசங்க கூட்டாளி**

இக்கூட்டாளிதொழிலில்முதலிடுவதுமில்லை நிர்வாகத்தில் பங்கேற்பதுமில்லை. இவர் கூட்டாளியாக தன்பெயரை பயன்படுத்த அனுமதித்து அதன் மூலம் கூட்டாண்மையின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள உதவுகிறார். இவருக்கு இலாபத்தில் பங்குஇல்லை. வியாபாரக்கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும்பொறுப்பாகிறார்.

**4.இலாபத்தில்மட்டும் பங்கேற்கும் கூட்டாளி:**

இக்கூட்டாளிஇலாபத்தைமட்டும்பகிர்ந்துகொள்வார். நட்டத்தைப்பகிர்ந்துகொள்ளமாட்டார்.இவர்நிர்வாகத்தில் பங்குபெறமுடியாது.ஆனால்மூன்றாம்நபருக்கு இவருடைய பொறுப்பு வரையறாப்பொறுப்பாகும்.

**58.முறைக்கேடான ஒதுக்கீடு பற்றி குறிப்புவரைக ?**

கீழ்கண்ட நிலைகளில் ஒதுக்கீடு முறைகேடான ஒதுக்கீடு என்று கருதப்படுகிறது.

1.பங்கொன்றின் இயல்மதிப்பு குறைந்தது 5 சதவீதம் செய்தல்

2.தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்தளவு பங்கெடுப்பு பெறாத போதும் பங்குகளை ஒதுக்கீடு செய்தல்

3.பங்கு விண்ணப்பப்பணத்தை அட்டவணை வங்கியில் போட்டு வைத்திருக்காமல் ஒதுக்கீடு செய்தல்

4.தனி ஏற்பாட்டின் மூலம் பங்குமுதல் திரட்டிட ஏற்பாடு செய்துவிட்ட நிலையில் தகவலறிக்கை வெளியிடாத போது தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை ஒன்றை பங்கு ஒதுக்கீட்டிற்கு குறைந்தது 3 நாட்களுக்கு முன்னர் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.அவ்வாறு தாக்கல் செய்யா விடில் அது முறைக்கேடான ஒதுக்கீடாக கருதப்படும்.

**59.கூட்டுருவாக்க சான்றிதழ் பெற தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள்:**

**1.அமைப்பு முறையேடு**: நிறுமத்தின் செயல்பாட்டு எல்லைகளை, நோக்கங்கங்களை வரையறுத்து காண்பித்தல்.நிறுமத்தின் பெயர், பதிவு அலுவலகம் உள்ள இடம், அனுமதிக்கப்பட்ட பங்கு முதல், நிறுமத்தின் நோக்கங்கள் உள்ளடக்கியிருக்கும் ஆவணமாகும்.

**2.செயல்முறை விதிகள்**: உள் மேலாண்மைக்கு தேவையான நடைமுறை விதிகளை உள்ளடக்கியிருப்பது. போதிய பத்திர தலைகள் ஒட்டியிருக்கும். அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்ட அனைவரும் இதில் கையொப்பமிட வேண்டும்.சாட்சிகளும் கையொப்பமிட வேண்டும்.

3.நிறுமப்பதிவாளரிடம் பெற்ற பெயருக்கான ஒப்புதல் மடலின் அசல்.

**4.இயக்குநர் பட்டியல்:** இந்நிறுமத்தில் முதல் இயக்குநர்களாக செயல்பட இசைந்துள்ள இயக்குநர்களின் பெயர் பட்டியல்.

5.இயக்குநர்களாக இருக்க எழுத்து மூல இசைவு

6.பதிவு அலுவலகத்தின் முகவரி

7.சட்டமுறை உறுதிப்பிரகடனம்: போதுமான சட்ட விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுவிட்டன என்ற உறிதி விளம்பலை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

**60. ஆண்டுப் பொதுக்கூட்டம்**

நிறுமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் நிறுமத்தின் முதல் ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். பின்னர் இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கிடையே உள்ள கால இடைவெளி 15 மாதங்களுன்னு மிகாமல் இருத்தல் வேண்டும். இக்கூட்டத்தின் மேற்கொள்ளப்படும் சாதாரண நடவடிக்கைகள்.

1. ஆண்டுகணக்குகள் இயக்குநர் மற்றும் தணிக்கையர் அறிக்கைகளை விவாதித்து பெற்றுக் கொள்ளுதல்.
2. பங்காதாயம் விளம்புதல்
3. பதவி விலகும் இயக்குநர் இடங்களில் இயக்குநர்களை நியமித்தல்.
4. தணிக்கையரை நியமித்து, அவருடைய ஊதியத்தையும் நிர்ணயம் செய்தல்.

**61.ஊக வணிகர்களின் வகைகள்:**

**1.காளை**:எதிர்காலத்தில்பத்திரங்களின்விலையேற்றம் பெறும்என்றுஎதிர்பார்க்கின்றஊகவணிகரை காளை (அ) தொஜிவாலாஎன்பர்.இவர்எல்லாம்நன்மைக்காகவேநடை பெறும்என்றமனப்பாங்குகொண்டவா.எதிர்காலத்தில் அதிகவிலையில்விற்கமுடியும்என்றஎண்ணத்தில் தற்போதுபத்திரங்களைவாங்கமுனைகிறரர்

**2.கரடி** : எதிர்காலத்தில் பத்திரங்களின் விலைவீழ்ச்சி அடையும் என்று எண்ணுகின்ற ஊகவணிகரை கரடி(அ) மண்டிவாலா என்பர் அவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்குகொண்டவர். பங்குகளைப்பின்னர் குறைந்த விலையில்வாங்கமுடியும்என்றஎண்ணத்தில்தற்போது அதைஅதிகவிலையில்விற்பனைசெய்கிறரர்.

**3.கலைமான்**:இவர் நிறுமத்தின் பங்குகளை புதியவிடுப்புகளில் பங்குகளைகேட்டுவிண்ணப்பம்செய்து ஒதுக்கீட்டில்மூலம்பெற்றுக்கொண்டுபின்னர்.அவற்றை நல்லவிலையில்விற்றுவிடுவார்.இவர்முன்னெச்சரிக்கை உடையவர்.இவரைமுனைமவேட்டையாளார்என்றும் அழைப்பார்

**4.முடவாத்து**:தற்போழுதுதனதுநடவடிக்கைகளில்உள்ள இடாபாடுகளைகளைவதில்போரடிக்கொண்டிருக்கின்ற கரடிஊகவணிகரையேமுடவாத்துஎன்பர்.பின்னா குறைந்தவிலையில்வாங்கிகொடுக்கும்எண்ணத்தில்தற் போதுபத்திரங்களைவிற்பார்.குறிப்பிட்டநாளில்பங்குகளை எந்தவிலையிலும்வாங்குவதற்குபங்குகள்கிடைக்காமல் முடக்கப்பட்டநிலையில்இருப்பரர்.

**62.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள்தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக ?**

இதுபேரளவுசில்லறைவியாபாரஅமைப்பு கூட்டுறவு அமைப்பில்தொடங்கப்படுவதுஇதில்விற்கப்படும் பொருட்கள்விலைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரேவிலைபேரம்பேசஇயலாது. வரைவிலக்கணம : சில்லறைவிற்பனைசெய்யும்துறைவாரிஅமைப்புநான்கு அடிப்படைதுறைகளைக்கொண்டது.மளிகைப்பொருள்சுய சேவைப்பிரிவுமாமிசப்பால்பொருள்கள்மற்றும்வீட்டுஉப யோகப்பொருள்கள்விற்பனைசெய்யும்இடம்சலுகைஅடிப் படையில்துறைகளைகுத்தகைக்குநடத்தம்இடம்என்றுM.M .ஜிம்மாமென்வரையறுக்கிறாr.

சிறப்பியல்புகள்

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. பொருட்களில்கலப்படம்தவிrக்கப்படும்

சரியானஅளவுஎடைகுறைஎன்றநிலைஏற்படுவதுஇல்லை.

8.அரிதானபொருட்கள்கூடஇங்குவிற்பனைசெய்யப்படும்.

**63.பொதுத்துறை தனியார்துறை வேறுபாடு :**

| வ.எண் | பொதுத்துறை | தனியார்துறை |
|---|---|---|
| 1 | சேவை நோக்கம் இத்துறைக்கு இரட்டை நோக்கங்கள் உள்ளன. பொருளாதார முன்னேற்றத்தை மற்றும் மக்களிடையேபொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையில் ஏற்படுத்துதல் ஆகியவை | இலாப நோக்கம் மட்டுமே கொண்டுள்ளது. |
| 2 | போதிய அளவு மற்றும் வறையறா நிதி. மக்களின் சேமிப்பை வங்கி கடன்பத்திரம் வாயிலாக வெற்றிகரமாக திரட்ட முடியும். | வரையறுக்கப்பட்ட நிதி.நாட்டு மக்களின் சேமிப்பைதிரட்டுவதிலோ வெளிநாட்டிலிருந்தோ உதவி பெறுவது இதற்கு எளிதல்ல. |
| 3. | ஒரு சிலரிடம் செல்வமும் வருமானமும்செரிவடைவைத தடுக்க முடியும். | பொருளாதார வலிமை செரிவடைவதை துண்டுகிறது. |
| 4. | தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்ற நடத்துதல் | தனியார் துறை எப்பொழுதும்அபாயம் குறைவாக உள்ளது மற்றும்லாபம்அதிகமக உள்ள தொழில்களை மட்டுமே நடத்தும் |
| 5. | நாட்டின் வழங்களை பாதுகாக்கின்றன. | காடுகள் சுரங்கங்கள் போன்றவற்றைதனியர் துறைதன்சுயநலத்திற்காக சுரண்டுகிறது. |
| 6. | பின்தங்கியபகுதிகளில் தொழில்நிறுவனத்தை தொடங்கி அனைத்து பகுதிகளிலும் சமமாக வளர்ச்சிபெறசெய்படுகிறது | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதை விரும்புவதில்லை. |
| 7. | அடிப்படை தொழில்கள் இராணுத்தை சார்ந்த தொழில்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறையில்உள்ளது | நுகர்வோர் பொருள்கள் விவசாயம் போன்றவை தனியார் துறைக்கு நிடப்பட்டுள்ளன. |
| 8. | நுகர்வோர்களின் நலனை காப்பது இதன் தலையாய பணியாக உள்ளது.அவர்களுக்கு தரமான பொருட்களையும் பணியினையும் குறைந்த விலையில் பொதுத்துறை வழங்குகிறது. | நுகர்வோர் சுரண்டப்படுகின்றனர். |

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: **4X20=80**

**64)அ)பல்வேறு வகையான தொழின் வடிவமைப்புகளை பற்றி விவரி :**

தொழில் அமைபப்பன வடிவங்கள்

1. **தனிவணிகநிறுவனங்கள்**

தனிநபரால்உருவாக்கப்பட்டுமேலாண்மைசெய்யும்வணிகஅமைப்புதாமேமுதலீட்டுமேலாண்மைசெய்துகட்டுப்படுத்தப்படும்வியாபாரஅமைப்புதனிவணிகரேஅனைத்துபணிகளையும்செய்கிறர். தொழிலில் ஏற்படும் இலாபம்முழுவதும்அவரையேசேரும்.அதுபோல்நட்டம் முழுவதும்அவரேஏற்கவேண்டும்தொடங்குவதுஎளிது. சட்டச்சடங்குகள்ஏதும்இல்லை.

**2.இந்து கூட்டக்குடும்ப வணிகம் :**

இந்துகுடும்பவணிகத்தில்ஒரேகுடும்பத்தில்பிறந்தவாகள் உறுப்பினாகள்அவர்கள்சொத்துகள்அனைத்தும்கூட்டுச்சொத்தாகும்.குடும்பத்தலைமைஉறுப்பினருக்குகாத்தா என்றுபெயர். தலைமைஉறுப்பினரால்குடும்பவணிகம் நடத்தப்படுகிறது.விவசாயம்கைத்தொழில்கள் சிறுதொழிற்சாலை போன்றதொழில்களில்ஈடுபடுவர்கள். இந்துவாரிசுசட்டம்1956ஒருகூட்டுஉரிமைமரணம்அடைந்தபின் அவரின்வாரிசுதாராகள்சொத்தின்உரிமையுள்ளவராகிறார்கள்.1985ஆம்ஆண்டிலிருந்துஇச்சட்டம்மகனைப்போலவேமகளுக்கும்சமஉரிமைவழங்கிவருகிறது.

3.**கூட்டாண்மை**:இருவரோஅல்லதுஅதற்குமேற்பட்டநபாகளோஒப்பந்தத்தின்மூலம்தேவையானமுதலீட்டு திறமையும்அளித்துஒப்புக்கொண்டவிகிதத்தின்படிஇலாப நட்டம்பகிர்ந்துதொழிலைநடத்தும்அமைப்பு குறைந்தபட்சம்இருவர்அதிகபட்சம்வங்கிதொழிலுக்கு 10 நபாகள்பிறதொழில்களுக்கு 20 நபாகள் ஒவ்வொருகூட்டாளியும்வியாபாரமேலாண்மையில்பங்குகொள்ளும்உரிமையும்கருத்துக்கூறும்உரமையும்உண்டு.

4.**கூட்டுப்பங்குநிறுமம்**: நிறுமம்என்பதுபலநபாகளின் சங்கமாகும்.இதுசட்டத்தால்கூட்டுருவாக்கப்பட்டு தனிநபர்தன்மையும்பொதுமுத்திரையும்நிலைப்பேற்று தொடாச்சியும்பெற்றஅமைப்பாகும்.நிறுமம்தன்பெயாலேயேஒப்பந்தங்களில்ஈடுபடலாம்.பங்குநரின்பொறுப்புவரையறுக்கப்பட்டது.பங்குகளைஎளிதாகமாற்றித்தரஇயலும்நிறுமத்தின்மேலாண்மைஇயக்குநரவையிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5.**கூட்டுறவுசங்கங்கள்**: பொதுவானபொருளாதாரநலன் கருதிதாமாகஒன்றுசோந்துஅமைத்துக்கொள்ளும்சங்கமாகும்.இதன்நோக்கம்சேவைசெய்தல்முதன்மைப்பணி. இலாபம்ஈட்டுவதுஇரண்டாவதுபணி.ஒருநபர் எத்தனைபங்குகள்வைத்திருந்தாலும்அவருக்குஒருவருக்குமட்டுமேஉண்டு.ஒருநபர்ஒருவாக்குஎன்பதுஇதன்மிகமுக்கியகோட்பாடாகும்.இதில்பொதுவாகரொக்கஅடிப்படையில்மட்டுமேவியாபாரம்நடைபெறும்.கூட்டுறவுஅமைப்பு பதிவுசெய்தவுடன்கூட்டுருவாக்கம்பெறுகிறது.இவ்வமைப்புகுடியாட்சிஅமைப்பின்கோட்பாட்டின்படி நிர்வகிக்கப்படுகிறது.

அரசுஇதற்குமுத்திரைத்தாள்வரிபதிவுகட்டணங்கள்வருமானவரிஇவற்றிலிருந்துவிலக்களிக்கப்பட்டிலுக்கிறது.

6.**பன்நாட்டுநிறுமங்கள்**: பன்னாட்டுநிறுமம்என்பது இரண்டுஅல்லதுஅதற்குமேற்பட்டநாடுகளில்வியாபாரம் நடத்திமேலாண்மைசெய்துவருவதாகும்.

சிறப்பியல்புகள்

1. ஒரேநேரத்தில்பலநாடுகளில்நடத்தப்படும்
2. மிகப்பெரியஅளிவில்செயல்படும்
3. பிறநாடுகளில்உள்ளகச்சாப்பொருட்கள்பணியாளாகள்சந்தையைபயன்படுத்திக்கொண்டுபோக்குவரத்துச்செலவுகளைகுறைக்கமுற்படும்.

(எ.கா) யூனிலீவர் லிமிடெட் - பிரிட்டிஷ்நிறுமம்
யூனியன்கார்பைடு - அமொாக்காநிறுமம்
பிலிப்ஸ் - டச்சுநிறுமம்
கோகோகோகோகழகம் - அமொாக்காநிறுமம்

**அரசுநிறுவனங்கள்**பொதுமக்களுக்குசேவைசெய்ய அரசாங்கத்தினால்நடத்தப்படும்நிறுவனங்கள்

1.**துறைமுறைஅமைப்பு**:

இதுஅரசின்ஒருபகுதியாகசெயல்படுகிறது. அந்தந்தஅமைச்சகத்தின்நிர்வாகஅதிகரகளால்நிர்வாகம் செய்யப்படுகிறது.இதுபொதுத்துறைஅமைப்பில்மிகவும் பழைமையானதாகும்.

2.**பொதுகூட்டுரு**:பாராளுமன்றத்தில்தனிச்சட்டத்தின்மூலம்உருவாக்கப்படும்அமைப்புஇதுசட்டமுறைக்கழகம்என்றும்பெயர்இதுஅரசின்நிதியுதவியுடன்மேலாண்மையில்சுயாட்சித்தன்மைகொண்டதாகும்.

இதன்மேலாண்மைஅரசால்நியமிக்கப்படும்இயக்குநாகுழுவால்நிர்வாகம்செய்யப்படுகிறது.

இதன்நோக்கம்பொதுமக்களுக்குச்சேவைசெய்தல்.

(எ.கா)இந்தியரிசர்வுவங்கிஇந்தியஆயுள்காப்பீட்டுகழகம்யூனிட்டிரஸ்டுஆப்இந்தியாஉற்பத்தி தொழில்நிதிகழகம்.

3.**அரசுநிறுமங்கள்**:இந்தியநிறுமச்சட்டம்1956-ன்படி உருவாக்கப்படுவது.இதன்செலுத்தியபங்குமுதலில் 51% மத்தியஅல்லதுமாநிலஅரசுகளோஅல்லதுமத்தியமாநில அரசுகளோசோந்துபெற்றிருத்தல் தனியார் நிறுமத்திலும்அரசுமுதலீடுசெய்கின்றன. இதன்பணியாளாகள்அரசுஊழியாகள்அல்லா.தனியார் துறைஏற்கஅஞ்சும்தொழில்களில்அரசுநிறுமம்முதலீடு செய்கிறது.நலிவடைந்ததனியார்துறைநிறுவனங்களை ஏற்றுநடத்தப்படுகிறது.

(எ.கா)அரசுபோக்குவரத்துக்கழகம்இந்துஸ்தான்ஸ்டில்லிமிடெட்மாருதிஉத்யோக்பெல

4. **வாரிய அமைப்பு** வாரிய அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச் சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. (ஏ.கா.) தமிழ்நாடு மின்சாரவாரியம்.

**64.ஆ.அரசு தொழில்களின் நோக்கங்கள்** :

**1.பல்வகைஉற்பத்தி செய்ய உதவுவது**: இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.லாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள் அஞ்சும் தொழிகள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.

**2.அடிப்படை தொழிகளின் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எஃகு ஆலைகள் வேதிய தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிகள் அரசு தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது.

**3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:**

சிலதொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய விரும்பும் மேலும் அந் நிறுவனங்கள் தொழில்

உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர் கலால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்கி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**4.இன்றியமையாத வசதிகளை நல்குவது**: குடிநீர் மின் உற்பத்தி மின்சக்தி எரிவாயு போக்குவரத்து தகவல் தொடர்பு போனடறவை நாடு முழுவதும் அன்றாட தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும் இத் தேவைகள் மிக குறைந்த விலையில் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே இவ்வசதிகளை செய்து தரும் அமைப்பகள் அரசு தொழிகள் ஆகவே இயங்க வேண்டும்.

**5.முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:** ஒரு நாட்டை அயல் நாடுகளின் தக்குதலில் இருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழிகள் தனியார் வசம் இருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்பு உண்டு.அல்லாமலும் அவர்களட நாட்டின்பாதுகாப்பு குறித்த ரகசியங்களை எதிரி நாடுகளுக்கு சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.

**6.அனைத்து பகுதிகளிலும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல்:**தொழில் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்கு தேவையான அனைத்து உற்பத்தி தொழில்களை ஏற்படுத்துவதே ஆகும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சிரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.தனியார் துறையினர் லாபம் ஈட்ட வாய்ப்ப உள்ள அவர் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கவிரும்பியதில்லை.

**7.இயற்கை வளங்கள் தோன்றி எடுத்தல்:** நாட்டின் இயற்கையாக கிடைக்கும் பொருட்கள் வளங்களை தோன்றி எடுக்கும் தொழிகளில் முதலீடு செய்வதே நட்டத்தை ஏற்று கொள்ள தனியாா துறை விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிசன் புதுத்தோற்று வாய்களை கண்டுபிடிப்பதற்காக பேரளவு தொகைகளை செலவிடுகிறது.

**8.பொருளாதார வலிமை** செரிவடைவதை தடுத்தல்: உற்பத்தியானது தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய லாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொது மக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர் தனியார் துறை அவ்வாறு லாப நோக்கோடு செயல்படும் போது அதன் விலைவாக பொருளாதார வலிமை அவற்றிடம் மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம்.

**9.நிறைவேலைவாய்பை உறுதிபடுத்துதல் :**
நிறைவேலைவாய்பு பொது உடமை உற்பத்தியினாலே நாடுகள் கூட வேலைவாய்பை பெறுவதில்லை .நாட்டில் உள்ள வழங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டால்தான் பொருளதாரவளர்ச்சி விரைவாக ஏற்படும்.இதற்கு அரசு பொருளாதார துறை கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

**10.அரசின் வருவாயை பெருக்குதல்:** சில அரசு நிறுவனங்கள் வணிக கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும்.அந்நிறுவனங்களில் வருவாய் அரசு கருவுலத்தில் சேர்க்கப்படும்.இவ்வாறு அரசின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கிய துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த படுகிறது இது மக்கள் வாழ்க்கை தரம் உயர்த்த உதவும்.கல்வி மருத்தவம் வீடு போன்றவை பொது நல பணிகளுக்கம் இவ்வருவாய்செலவிடப்படுகிறது.

**65)அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசியங்கள்:**

1)**தனிநபர்உரிமையும்கட்டுபாடும்** தனிநபர் ஒருவரே இதன்உரிமையாளர்.எனவே அவரே உரிமையாளராகவும் தலைவராகவும்யாருடையகுறுக்குஇல்லாமல்சுந்திரமாக வியாபாரத்தைநடத்துகிறார்.அதனால்தனியாள்வணிகத்தின்உரிமையும்கட்டுப்பாடும்அவர் வசமேஉள்ளது.

2)**மூலதனம்**: தனியாள்வணிகத்தில்அவரேமுதலீடு செய்கிறர். இம்முதல்தன்சொந்தசேமிப்பிலிருந்தோ அல்லதுநண்பாகள்உறவினாகள்மற்றும்நிதிநிறுவனங்களிடமிருந்தோகடனாபெற்றுமுதலீடுசெய்யலாம்.

3)**வரையறாபொறுப்பு**: இவரின்பொறுப்பு வரையறுக்கப்படாதது.வியாபாரகடன்களுக்குதொழிலின் சொத்துகள்போதுமானதாகஇல்லாவிட்டால்தனதுசொந்த சொத்திலிருந்துஅக்கடன்களைதீர்க்கவேண்டும்.

4)**இலாபநட்டம்**:வியாபாரத்தில்கிடைக்கும்இலாபம் முழுவதும்தனிவணிகரையேசேரும். அவர்பிறருடன் பங்கிட்டுக்கொள்ளதேவையில்லை.அதுபோலநட்டம்ஏற்பட்டால்அந்தநட்டம்முழுவதையும்அவரேஏற்கவேண்டும்.

5)**சட்டத்தனித்துவமின்மை**: தனியாள்வணிகத்தில் உரிமையாளரையும்தொழிலையும்சட்டம்ஒன்றாகக்கருதுகிறது.உரிமையாளரோஅவரேநிர்வாகம்செய்கிறார்.கூட்டுப்பங்குநிறுமத்தைப்போல்உரிமையும்நிர்வாகமும்பிரிக்கப்படவில்லை.

6.**தனிச்சட்டம்மில்லை**:கூட்டாண்மைசட்டம்கூட்டாண்மைக்கும்இந்தியநிறுமங்கள்சட்டம்நிறுமத்திற்கும்இந்திய கூட்டுறவுச்சட்டம்கூட்டுறவுசங்கங்களுக்கும்இருப்பதைப் போலதனியாள்வணிகத்திற்குதனிச்சட்டம்ஏதுவும்இல்லை.

7)**பதிவு**:- தனியாள்வணிகத்தைபதிவுசெய்ய வேண்டியதில்லைசிலவகைத்தொழில்களைமேற்கொள்ள உள்ளாட்சிநகராட்சிமற்றும்மாநகராட்சியிடமிருந்து உரிமம்பெறவேண்டும்.

8)**வாழ்வு**: நிறுமம்போன்றுஇதற்குநீடித்தவாழ்வு கிடையாது. தனியாள்வணிகரின்வாழ்வைப்பாதிக்கும் எதுவும்அவருடையதொழிலையும்பாதிக்கும்.அவருடைய இறப்பு(அ)தொழில்திறமைஇழத்தல்(அ) அவருக்கு வாரிசுஇல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்குகொண்டுவரும்.

9)**எளிமை**இதைதொடங்குவதும்கலைத்தலும்மிகவும் எளிது. இவ்வணிகத்தைகலைக்கசட்டவிதிகளைபினபற்ற தேவையில்லை.

10)**உள்ளூர்வியாபாரம்**:இவ்வணிகம்ஒருகுறிப்பிட்டப்பகுதியில்மட்டுமேநடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன்சிலஇடங்களில்நடைபெறும்.

**65.ஆ.ஒரு நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் விவரி:**
**நிறுமச் செயலரின் பணிகள்:**

**1. மேற்பார்வையும் கட்டுப்பாடும்** நிறுமச்செயலர் தன் கீழுள்ள துறையின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கிறார். நிறுமத்தின்முதன்மை அதிகாரி என்ற முறையில் உண்மைச் சான்றென உறுதி அளிக்க வேண்டிய ஆவணங்களில் கையொப்பமிடுதல் இவரின் பணியாகும்.

**2. கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்** கூட்டம், நாள், இடம், நேரம் முதலியவற்றை முடிவு செய்தும், நிகழ்ச்சி நிரலை தயாரித்தும் அனுப்புகிறார் கூட்டம் சிறப்பாக நடைறெ அனைத்து பணிகளையும் செய்கிறார்.

**3. கூட்டத்தின் செயல்பாடுகள்** கூட்டத்தின் செயல்பாடுகள், அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகளுக்கு முரண்படாமல் பார்த்துக் கொள்கிறார்.

**4. பங்குநர்களின் நலன்காத்தல்**

பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணி செய்கிறார். கூட்டங்களில் கடைபிடிக்க வேண்டிய சடங்குகள் அனைத்தையும் பின்பற்றிடவும், நிகழ்ச்சி குறிப்பேட்டில் அனைத்தையும் பதிவு செய்யும் பணியினையும் செய்கிறார்.

**5. பங்குநர்களின் ஐயம் நீக்குதல்** பங்குநர் ஏழுப்பும் வினாக்களுக்கு, காலங்கடத்தாமலும், பண்புடனும் பதிலளிக்கிறார் இரகசியங்களைத் தெரிவிக்காமலும், தெரிவிக்க வேண்டியவற்றை தெரிவித்தும் பங்குநர்கள் மனநிறைவு பெறும் வகையில் செயலாற்றுகிறார்.

**6. பணிகளை ஒருங்கிணைத்தல்** இயக்குநர் அவையுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, பல்வேறு துறைகளில் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.

**7. நிறுமத்தில் சுமூக உறவு** எழியர்கள், தொழிலாளர்கள், இயக்குநர்கள், நிறுமத்துடன் தொடர்பு கொண்ட வெளிநபர்களுடன் சுமூக உறவு நிலவ உழைக்கிறார்.

**8. ஊழியர் நலன்** தங்களின் ஊழியர்களின் நம்பிக்கையை வளர்த்து அவர்களின் உளமார்ந்த ஒத்துழைப்பை செயலர் பெறுகிறார்.

**நிறுமச் செயலரின் கடமைகள்**

**ஆ) சட்டமுறை கடமைகள்** 1. உண்மையெனச் சான்றளிக்க வேண்டிய ஆவணத்தில் கையொப்பமிடல்

2. தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையை தாக்கல் செய்தல்

3. ஒதுக்கீடு செய்த பங்கு சான்றிதழை வழங்கல்

4. பதிவு அலுவலகம் உள்ள இடம் குறித்த அறிக்கையை தாக்கல் செய்தல்.

5. ஆண்டு அறிக்கையில் கையொப்பமிடல்

6. உறுப்பினர்களக்கு பொதுக்கூட்ட அறிக்கையை அனுப்புதல்

7. நிகழ்ச்சி குறிப்புகளை தயார் செய்தல்

8.சட்டமுறை ஏடுகளை உரிய முறையில் வைத்திருத்தல்.

**இ) பொதுக் கடமைகள்**

1. தன் கடமைகளை கவனத்துடனும், நேர்மையுடனும் செய்தல், தன் அதிகார ஏல்லையை மீறாத செயல்பட வேண்டும்.

2. இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல் வேண்டும்.

**66)அ)கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :**

**1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43** :விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம்.

**(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால்

**(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின்

**(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால்

**(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால்

**(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

**66.ஆ)பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங் களுக்கும் உள்ள வேறுபாடு :**

| வ.எண் | அடிப்படை | பங்குகள் | கடனீட்டுப்பத்திர ங்கள் |
|---|---|---|---|
| 1. | பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனீட்டுப்பத்திர ங்கள் நிறுமத்திற்கு கொடுத்த கடனை உறுதிபடுத்தும் சான்றாகும்கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனா ளர்ஆகிறார் |
| 2. | இலாபத்தை வழங்குதல் | போதுமா லாபம் ஈட்டினால் மட்டுமே பங்குனர் கட்குபங்காதாம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது. இயக்குநர் முடிவால்இதனை மாற்ற முடியாது |
| 3. | இலாபத்தி ன் அளவு | முற்றுரிமை பங்கட்கு குறிபிட்ட விதத்தில் நிலையான பங்காதயம் ஆனால் நேர்மை பங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாய விகிதம் | குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவை ஒட்டி வட்டிவீதம் மாறாது. |

| | | | |
|---|---|---|---|
| | | லாபத்திற்கேற்ப மாறக்கூடியது | |
| 4. | இயக்குநர் ஒப்புதல் | லாபம் ஈட்டுறுப்பினும் இயக்கநர்அவை பரிந்துறைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துரையும் ஒப்பதலும் வேண்டியதில்லை |
| 5. | லூபத்தை வழங்குதல் | பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திர வட்டி லாபத்தின் மீதான செலவாகும். |
| 6. | பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே ஆகும். | ஆத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |
| 7. | வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம் பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | கடனீட்டபத்திரங் களைவ ட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை |
| 8. | சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |

**67)அ).கூட்டுறவு சங்கத்தின் நன்மை தீமை :**
**நன்மைகள்:**

**1.அமைப்பது எளிது:** கூட்டுறவு சங்கத்தை அமைப்பது எளிது.செலவும் அதிகமில்லை. பதிவு நடைமுறையும் எளிமையானது.

**2.வரையறாஉறுப்பினர்கள்:** உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை.ஒவ்வொரு உறுப்பினரும் தன் விருப்பப்படி சேரவோ விலகவோ உரிமை உண்டு.

**3.மக்களாட்சி மேலாண்மை:** கூட்டுறவு அமைப்பின் மேலாண்மை மக்களாட்சி தன்மை கொண்டுள்ளது.எவ்வளவு முதலீடு செய்திருப்பினும் உரிமையாளருக்கு வாக்குரிமை உண்டு.பெருமளவில் பங்குகளை வைத்திருப்பவர்களின் கைகளில் அச்சங்கங்கள் கட்டுண்டு கிடப்பதில்லை.

**4.வரையறு பொறுப்பு:**உறுப்பினர்களின் பொறுப்பு அவாகள் வைத்திருக்கும் பெயரளவு மதிப்பு வரை என வரையறுக்கப்பட்டுள்ளது.உறுப்பினர்களின் சொத்துகளை இழக்க தொழிலுக்காக இழக்க வேண்டியதில்லை.

**5.மலிவான சேவை**:இச் சங்கம் நல்ல சேவைகளை மலிவான செலவில் அளிக்கிறது.சேவை என்பது முதன்மை நோக்கம் இலாபம் என்பது அடுத்த பட்சம்.

**குறைபாடுகள்:**

**1.திறமையற்றமேலாண்மை:**கூட்டுறவு சங்கத்திலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்ய போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறாகள்.மேலாண்மை திறம்படச் செய்ய ஆூவம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

**2.வரையறு முதல்:**குறைந்த வளங்கள் உள்ள நபாகளால் கூட்டுறவு சங்கங்கள் வழக்கமாக அமைக்கப்படுகிறது.ஒரு நபர் ஒரு வாக்கு என்ற முறையே உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடுக்கிறது.பேயரளவு தொழில் செய்ய போதுமான முதல் தொகை இந்த நிறுவனங்களால் இடமுடிவதில்லை.

**3.ஒற்றுமையின்மை** : சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதில்லை.இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

**4.அசைக்க முடியாத மனிதர்களின் அதிகாரம்:** அரசியல் சார்பில்லாத சில கூட்டுறவ சங்கத்தில் சில உறுப்பினர்களின் அரசியல் செல்வாக்கோடு அமைப்பை மேலாண்மை செய்கின்றனர்.அவர்கள் இந்த அமைப்பை சொந்த சொத்துகள் போல் சுரண்ட வாய்ப்பு உள்ளது.

**5.உரிமையை மாற்ற இயலாமை:**கூட்டுறவு சங்கத்தின் பங்குகள் மாற்றியல்புகள் கொண்டவை அல்ல.சங்கத்தில் இருந்து விலக விரும்புவோர் பங்குகளை திரும்ப செலுத்தி பங்கு முதலை திரும்பப் பெறலாம்.

**67.ஆ)செபின் நோக்கம் இயல்பு பணிகள் அதிகாரம் விவரி :**

**நோக்கம் :**

**1.முதலீட்டாளர்களின் நலநனை பாதுகாத்தல்**

**2.பத்திரச்சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல்**.அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதனை சார்ந்த நடவடிக்கைகளியின் ஈடுபடுதல்.1992 ல் வாரியமாக செபி ஏற்படுத்தப்பட்ட போது அடைதரகர்களின் செயல்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் உள்வணிகத்தை தடைசெய்தல் பங்குகளின் ஏலத்தை நடைமுறைக்கோட்பாடுகள் உருவாக்கி நாணயமாக நடக்கச் செய்தல் ஆகிய பணி இதற்கு இருந்தது.

**இயல்புகள்:**

1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும்.

2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும்.

3.(அ)சபைத்தலைவர்கள்

(ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள்

(இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்

(ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.

4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல்

**அதிகாரங்கள்** : மேலாண்மை ஆகியவை உறுப்பினர்களிடம் இருக்கும். இவ்உறுப்பினர்கள்

அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிரை வேற்றுவோம்

1.வாரியத்தின் சபைத்தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

2.மத்திய அரசு நிதிஉதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது.

3.செபின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிகான அனைகலை வழங்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.வாரிம் தவறுதல் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

**பணிகள் :**

1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.

2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஓப்புறுதியாளர்கள் மற்றம் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல்

3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல்.

4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும்

5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்

6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றம் இடைத்தரகர்களுக்கான பயிாச்சியளித்தல்

7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல்

8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல்

9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்

10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியினை செய்தல்